பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 23 | திங்கட்கிழமை | 05.05.2025 | அதிர்வு 274

## பருத்தித்துறையில் கரையொதுங்கிய பெண்ணின் சடலம்



(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை, மூர்க்கம் கடற்கரையில் பெண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை கரையொதுங்கியது.

தும்பளை கிழக்கு,

06

## வாக்குச் சீட்டில் புள்ளடி மட்டுமே போட வேண்டும்


### வாக்காளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து



நாளை நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

07

## தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாரடைப்பால் உயிரிழப்பு



(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி, நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தேர்தல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்தார்.

அனுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையானமுதியன்சலாகேஅஜித்குமாரஜெயசுந்தர என்ற பொலிஸ் கொஸ்தபிலே உயிரிழந்தார்.

மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை

06

# இலங்கை வழிக்கு வராவிட்டால் வரிச் சலுகையை விலக்குங்கள்!

## ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவிடம் தமிழரசுக் கட்சி பட்டவர்த்தனமாகத் தெரிவிப்பு



“பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துதல், மனித உரிமைகளைப் பேணுதல், நல்லாட்சியை முன்னெடுத்தல், நல்லிணக்கத்தை உருவாக்குதல் போன்ற விடயங்களில் ஐரோப்பிய ஒன்றிய நிபந்தனைகளை நிறைவேற்றும் கடப்பாட்டில் இலங்கை அரசு தொடர்ந்தும் தவறிழைக்குமானால் அதற்கு வழங்கி வரும் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் விலக்கிக் கொள்ளலாம்.”

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவிடம் நேரடியாகவும் பட்டவர்த்தனமாகவும் தெரிவித்திருக்கின்றது இலங்கைத் தமிழரசுக் கட்சி.

06

## துப்பாக்கிச்சூட்டில் வேட்பாளர் ஒருவர் படுகாயம்!



களுத்துறை, நாகொட பகுதியில் நேற்று இரவு துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

அவர் நாகொட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




யாழ் மாவட்ட சுயேச்சை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வைக்கின்றமையை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனு வரும் ஜுன் 13ஆம் திகதி – அடுத்த மாதம் – நீதிமன்றுக்கு வருகின்றது. அன்றைய தினம் இந்த மனுவையொட்டி இடைக்காலத் தடை உத்தரவு ஏதும் வழங்குவதா மற்றும் எதிராளி தரப்பினருக்கு அழைப்பாணை விடுப்பதா என்பவை தொடர்பில் நீதிமன்றம் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேபோன்ற ஒரு வழக்கு யாழ் மாவட்டத்தின் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிராகவும் தயாராகிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி அதிபராக இருந்து, தேர்தலில் போட்டியிட்டு, எம்.பியானவர். அவருடைய பதவி விலகல் தொடர்பான சர்ச்சை விடயங்கள் இன்றைய ‘காலைமுரசு’

06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# தென்கிழக்குப் பல்கலையில் 2 தினங்கள் நடைபெற்ற 17ஆவது பட்டமளிப்பு விழா

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 17ஆவது ஆண்டு பொது பட்டமளிப்பு விழ. நேற்று முன் தினம் சனிக்கிழமை மற்றும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரு தினங்களாக பல்கலைக்கழகத்தின் பிரதான அரங்கில் நடைபெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவின் முன்னிலையில் பதில் உபவேந்தர் யூ.எல்.மஜீத் தலைமையில் சனி மற்றும் ஞாயிறு இரு தினங்களாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஆறு அமர்வுகளில் 2,077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர்.

முதலாம் நாள் முதல் அமர்வில் இலங்கை உயர் நீதிமன்ற நீதிபதி யஸந்த கொடகொடவும், இரண்டாம் அமர்வில் களனி பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத்துறை பேராசிரியர் கலாநிதி சீதா.பி. பண்டாரவும், மூன்றாவது அமர்வில் இலங்கைக்கான சவூதி அரேபிய நாட்டின் தூதுவர் காலித் ஹமூத் அல்-கஹ்தானியும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இரண்டாம் நாளான நேற்று முதல்

தொடர்ச்சி ▼













# தென்கிழக்குப் பல்கலையில் 2 தினங்கள் நடைபெற்ற 17ஆவது பட்டமளிப்பு விழா

தொடர்ச்சி ▲

அமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் துணைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே.எல் வசந்த குமாரவும் இரண்டாம் அமர்வில் ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ துறையின் பேராசிரியர் கலாநிதி மனோஜ் சமரதுங்கவும் மூன்றாவது அமர்வில் யாழ் பல்கலைக் கழகத்தின் பட்டப்படிப்பு பீடததின் பீடாதிபதி சிரேஷ்ட போசிரியர் ரீ. வேல் நம்பியும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பிரயோக விஞ்ஞான பீடத்தில் 172 மாணவர்களும், பொறியியல் பீடத்திலிருந்து 82 மாணவர்களும், தொழினுட்பவியல் பீடத்திலிருந்து 102 மாணவர்களும், கலை, கலாசார பீடத்திலிருந்து 314 மாணவர்களும், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழி பீடத்திலிருந்து 342 மாணவர்களும், முகாமைத்துவ மற்றும் வர்த்தக பீடத்திலிருந்து 378 மாணவர்களும், வெளிவாரி பட்டப் படிப்பு மாணவர்கள் 687 மாணவர்களுமாக 2,077 மாணவர்கள் பட்டங்களைப் பெற்றனர் எனப் பதிவாளர் எம். ஐ.நௌபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




















# மட்டு. மாவட்டத்தில் தேர்தலுக்கு ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ள நிலையில், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொதுமக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜஸ்ரினா முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரி பிரதான தேர்தல் அலுவலகமாக இயங்கவுள்ளதாகவும் அங்கிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வாக்களிப்பதற்கு 4,55,520பேர் தகுதிபெற்றுள்ளனர். அவர்கள் வாக்களிப்பதற்காக 447 வாக்களிப்பு நிலையங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வாக்களிப்பு நிலையங்களில் காலை 07.00மணி தொடக்கம் மாலை 04.00மணி வரையில் தமது வாக்கைச் செலுத்த முடியும். வாக்கு எண்ணும் பணிகள் 4.30மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன. வாக்கெண்ணுவதற்காக 144 வாக்கெண்ணும் நிலையங்கள் ஆயதப்படுத்தப்பட்டுள்ளன.

இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 383 தேர்தல் விதிமீறல்கள் முறையிடப்பட்டுள்ளன. எந்தவொரு வன்செயலும் இதுவரையில் அறிக்கையிடப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தல் கடமைகளுக்காக சுமார் 6,000 அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பொலிஸார் மற்றும் இராணுவத்தினருடன் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேர்தல்களை சுமுகமான முறையில் தேர்தலை நடாத்துவதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாளை காலை மட்டக்களப்பு இந்துக்கல்லூரியிலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

03ஆம் திகதி நள்ளிவுடன் தேர்தல் பிரசார பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. பொதுமக்கள் தமது வாக்குரிமையைச் பயன்படுத்தவேண்டும். சுமுகமான சுதந்திரமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு பொதுமக்கள் பூரண ஆதரவு வழங்கவேண்டும். – என தெரிவித்தார்.

# வங்கி ஓயா மேற் பிரிவு தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் தொடர் வேலைநிறுத்தம்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

நுவரெலியா, நானுஓயா, வங்கி ஓயா மேற் பிரிவு தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள்

கடந்த 24 ஆம் திகதி முதல் தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் இத்தோட்டத்தில் மரண சடங்கு இடம் பெற்றுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லாமல் மரண சடங்கு கலந்துக் கொண்டுள்ளனர்.

மரண சடங்குகளை முடித்துக் கொண்டு தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்லும் பொழுது தோட்ட நிர்வாகம் அனைத்து தொழிலாளர்களையும் மூன்று நாள்களுக்கு தொழிலுக்கு வர வேண்டாம் என கூறியுள்ளது.

அதனைத் தொடர்ந்து தோட்ட தலைவர்கள் தோட்ட அதிகாரியிடம் கலந்துரையாடிய போது, தமக்கு அறிவிக்காமல் மரண சடங்கில் கலந்து கொள்வதற்கு தொழிலாளர்கள் சென்றதன் காரணமாக எங்களால் எதனையும் கூற முடியாது என தெரிவித்துள்ளனர். இதற்கு நீதி கோரி மக்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

அத்தோடு தோட்ட அதிகாரிகள் பெண் தொழிலாளர்களை தகாத வார்த்தைகளால் பேசுகின்றனர் எனவும் தமக்கு வழங்க வேண்டிய உரிமைகளை, சலுகைகளையும் வழங்குவதில் இழுத்தடிப்பு காட்டப்படுவதாகவுன் அத்தோட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# தமிழ் மக்களின் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரிய முறையில் அவர்களிடமே ஒப்படைத்தல் வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கோரிக்கை



(கி.வசந்தன்)

எமது மக்களின் முதலீடாகவும் அவர்களின் கலாசார அடையாளமாகவும் காணப்படும் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரியவர்களிடமே ஒப்படைக்க தற்போதைய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் வசமிருந்த தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகள் தற்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மத்திய வங்கியினால் குறித்த நகைகள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இவ் விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்து தெரிவித்து நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

மனிதாபிமான யுத்தம் என்ற போர்வையில் மக்களைக் கொன்று குவித்து, அவர்களின் கலாசார அடையாளமாக பேணப்பட்டு வந்த சொத்துக்களை இல்லாமல் செய்து, தமிழ் மக்களை நிர்க்கதியாக்கிய பேரினவாத சிந்தனை கொண்ட அரசுகள், தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகளை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் இதுவரை எவ்விதமான கருத்துகளையும் வெளியிடாமல் இருந்திருக்கின்றன.

இந்த நிலையில் நகைகளை வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள வங்கிகளில் அடகு வைத்த மக்கள் தமது நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் தமது முதலீடுகள் அனைத்தையும் இழந்திருப்பதனால் பெரும் வறுமையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் தற்போதைய அரசு தேர்தல் நலனுக்கானதாக இருந்தாலும் அந்த நகைகள் தொடர்பில் தகவல்களை வெளிக்கொணர்ந்து அதனை வெளிப்படுத்தியமையை வரவேற்கின்றேன்.

எனினும் அந்த நகைகளை உரியவர்கள் இல்லை என்ற காரணங்களை காட்டி அரசுடைமையாக்காது நகைகளுக்கு உரித்தான தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை பொதுமக்களும் தங்களிடம் இந்த நகைகளை அடகு வைத்த பற்றுச்சீட்டுக்கள் இருக்கும் பட்சத்தில் அதனை வெளிப்படுத்தி தமது நகைகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கும் முன் வர வேண்டும்.

பற்றுச்சீட்டுக்கள் உள்ளவர்கள் அதன் பிரதிகளை என்னிடம் வழங்கும் பட்சத்தில் நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரியவர்கள் இந்த நகைகளை பெறுவதற்கு ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியும்.

அத்துடன் அரசாங்கமானது வங்கிகளில் அடகு வைத்த பற்றுச் சீட்டுக்கள் பல பொது மக்களிடம் இல்லாத நிலை தற்போது காணப்படுகின்றது. அது மாத்திரமன்றி அடகு வைத்த பலர் இன்று இயற்கை எய்தியும் உள்ளமையால் அவை தொடர்பில் ஏதுவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

எனவே அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமே தவிர நகைகளை அரசுடைமையாக்கி தமிழ் மக்களின் சொத்துக்களை கபளீகரம் செய்யக் கூடாது. – எனவும் தெரிவித்துள்ளார்.

# மஸ்கெலிய பகுதியில் மின்னல் தாக்கம் பால் சேகரிப்பு வாகனம் சேதமடைந்தது







(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்சிவிக் தோட்ட புளூம்பீல்ட் பிரிவில் நேற்று மாலை 5.30 மணியளவில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தில் மரக்கிளை முறிந்து விழுந்ததினால் அந்தப் பகுதிக்கு பால் சேகரிப்புச் சென்ற வாகனம் ஒன்று பால் சேகரிப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அதன் முன் கண்ணாடி முற்றாக உடைந்த போயுள்ளது.

இதன் காரணமாக நேற்று மாலையும் இன்றைய தினமும் பால் சேகரிப்பு செய்வதற்கு செல்ல முடியாத நிலை உள்ளதாக அதன் சாரதி தெரிவித்துள்ளார்.

வாகனம் பால் சேகரிப்பதற்காக வராத நிலையில் நேற்றைய தினம் தாம் பசுக்களில் எடுத்த பால் வீண் விரயமானதாக அந்தப் பகுதியில் உள்ள கால் நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவித்தனர்.

“அப்கட் டயரி” என்ற பால் சேகரிப்பு நிலையத்தில் பணியில் ஈடுபட்டு வந்த வாகனம் ஒன்றே இவ்வாறு சேதமடைந்து உள்ளது.

மேலும் இந்தப்பகுதியில் உள்ள வீடுகளில் மின்னலினால் மின் உபகரணங்கள் பல சேதமடைந்து உள்ளன. பதினைந்து தொலைக்காட்சி பெட்டிகள் பழுதுதாகின எனவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மேலும் நேற்று மாலை பெய்த இடி மின்னலுடனான காலநிலை காரணமாக பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பத்திரிகையில் தனியாக வெளியாகி உள்ளன.

அவர் அதிபர் பதவியை விட்டு தாமாக விலகி – அதாவது பதவியைத்துறந்து – தேர்தலில் போட்டியிட்டிருக்கலாம். அல்லது முறையாக – சட்ட, ஒழுங்கு விதிகளின்படி – ஓய்வுக்கு விண்ணப்பித்து, நேர் சீராக அனுமதி பெற்றுக்கொண்டு தேர்தலில் போட்டியிட்டிருக்கலாம். ஆனால் அவர் இரண்டையும் செய்யவில்லை என்று இப்போது கூறப்படுகிறது. அதனால் பிரச்சினை எழுந்துள்ளது. அவர் தேர்தலில் இறங்க முதல் தாமாகப் பதவியைத் துறக்கவும் இல்லை, அப்படி துறந்தார் எனக் கல்வி அமைச்சிடமிருந்து அனுமதி பெறவும் இல்லை. இரண்டையும் செய்யாத நிலையில் – முறையாக, ஒழுங்கு விதிப்படி தமது அரச சேவையை முடிக்கவும் இல்லை, ஓய்வு அனுமதியைப் பெறவும் இல்லை என்று இப்போது தெரிய வருகின்றது.

வைத்திய சேவையில் இடைநிறுத்தப்பட்டிருந்த வைத்தியர் அர்ச்சுனா, தமது பதவியை விட்டு முறையாக விலகாமல் தேர்தலில் போட்டியிட்டார் என்ற அடிப்படையிலேயே அவருக்கு எதிராக இப்போது வழக்குத் தாக்கலாகி உள்ளது.

அதேபோன்ற தவறை றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தியும் செய்துள்ளார் என்று தெரிவித்து, வழக்கு ஒன்றை அவருக்கு எதிராகத் தாக்கல் செய்து, அவரை எம்.பி. பதவியில் இருந்து அகற்றுவதற்கான முன் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

வைத்தியர் அர்ச்சுனாவுக்கு எதிரான வழக்கைக் கையாளும் சட்டத்தரணி அசோக்பரன் குமரகுருபரனே இப்போது றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கு எதிரான வழக்கையும் கையாளக் கூடும் எனத் தெரிகிறது. றஜீவனுக்கு எதிரான வழக்கை பத்திரிகையாளர் ஒருவர் மனுதாரராக முன் நின்று தாக்கல் செய்வார் எனவும் கூறப்படுகிறது.

கடந்த தடவை மாநகர சபைக்கு ஈ.பி.டி.பி. சார்பில் தெரிவு செய்யப்பட்ட ஜெகன் இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர் என்பதால் அந்தப் பதவியை வகிக்க முடியாது எனத் தெரிவித்து, வழக்குத் தாக்கல் செய்து, வெற்றியீட்டிய அதே பத்திரிகையாளர், இப்போது றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கு எதிரான வழக்கையும் மனுதாரராகத் தாக்கல் செய்வார் என்று தெரிகிறது.

வைத்தியர் அர்ச்சுனா வழக்கை ஒட்டி, அதன் தொடர்ச்சியாக இந்த வழக்கும் தாக்கலாவதற்கான சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக் குழுவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவுக்கு இடையில் நேற்று இரவு 8 மணி முதல் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்ற சந்திப்பின்போது இவ்வாறு தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவிடம் எடுத்து விளக்கினார் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன்.

கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையிலான இந்தக் குழுவில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், வைத்தியர் இ.சிறிநாத் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விசேட கண்காணிப்புக் குழுவில் அதன் உறுப்பினர்கள் ஐவரும், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைத் தூதுவரும், பிரதித் தூதுவரும் நேற்றைய சந்திப்பில் பங்கு பற்றினர்.

கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கைக்குத் தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டு வரும் விசேட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை அடுத்த ஆண்டில் முடிவடைய இருக்கும் சூழலில், அதை நீடிப்பதா என்பது குறித்து ஆராயவே ஐரோப்பிய ஒன்றியக் குழு கொழும்பு வந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குதல், இணையப் பாதுகாப்பு சட்டத்தை சீராக்குதல், நல்லாட்சி முறையைப் பேணுதல், பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துதல், நியாயமான அதிகாரப் பகிர்வை முன்னெடுக்கும் விதத்திலான அரசமைப்பை உருவாக்குதல் என்பவை தொடர்பாக இலங்கை சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாதமை குறித்து இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியினர் சுட்டிக்காட்டினர்.

**சுமந்திரன் கூறியவை**

“இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில், பொருளாதார ரீதியில் நாட்டை மேம்படுத்தும் நோக்கில் நாட்டுக்கான வரிச் சலுகைகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று நாம் வலியுறுத்தி வந்தோம். அந்த வரிச்சலுகைகளை இலங்கை அரசுகள் பெற்றுக்கொண்ட போதிலும், கடைசியில் நாட்டைப் பொருளாதார வங்குரோத்திலேயே கொண்டு போய் நிறுத்தியுள்ளன. மறுபுறத்தில் இந்த வரிச்சலுகையைப் பெறுவதற்கான நிபந்தனைகளையும் அரசு நிறைவேற்றவில்லை. தொடர்ந்து இவ்வாறு அரசு முறையற்ற விதத்தில் – பொறுப்பற்றுச் செயற்படும்போது வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குங்கள் என்று நாம் கோருவது நியாயமற்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது, பொறுப்புக்கூறலை நடைமுறைப்படுத்துவது, அதிகாரங்களை நீதி, நியாயமான முறையில் பகிர்வது, நல்லாட்சியைப் பேணுவது ஆகியவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேசத்துக்கும் தான் வழங்கிய உறுதிமொழிகளைத் தொடர்ந்து அரசு நிறைவேற்றவில்லை. உதாசீனப்படுத்தி வருகின்றது.

இப்படி ஏமாற்றுகரமான முறையில் இலங்கை அரசு தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது.

ஒரு வறியவன் – கஷ்டப்பட்டவன் தன் குடும்பத்துக்கு உதவி என்று வந்து கேட்டால் நாங்கள் தினசரி அவனுக்கு உதவலாம். ஆனால், அப்படி உதவும் பணத்தை அவன் தன் குடும்பத்துக்கு உரிய முறையில் செலவிடாமல், தன் போதைக்கும் கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறத்தில் தன் குடும்பத்தவர்களுக்கு அநியாயமான முறையில் தொல்லை கொடுப்பானாக இருந்தால் அவனுக்கு நாங்கள் தொடர்ந்து உதவி செய்ய முடியுமா? இத்தகைய நிலையில்தான் ஐரோப்பிய ஒன்றியத்திடம் உதவி பெறும் இலங்கை உள்ளது.

இலங்கை ஆட்சிப் பீடம் உங்களிடம் உதவி பெற்றுக்கொண்டு, மறுபக்கத்தில் நீதி செய்ய வேண்டிய தமிழர்களுக்கு அதைச் செய்ய மறுக்கின்றது. ஒரு புறம் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை வருமானத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மறுபுறம் தமிழ் மக்களின் தாயக பூமியை கபளீகரம் செய்யும் வேலைகளை முனைப்பாக முன்னெடுக்கின்றது. காணி பறிப்பைத்திட்டமிட்டுமுன்னெடுக்கும்அநீதியை இழைக்கின்றது. அதிகாரப் பகிர்வை முன்னெடுக்க மறுக்கின்றது. பொறுப்புக்கூறலை நிலைநாட்டப் பின்னடிக்கின்றது.

நீதியையும், நல்லாட்சியையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டும் தனது கடப்பாட்டை இலங்கை நிறைவு செய்வதற்கான நிபந்தனைகளைக் காலம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் விதிக்க வேண்டும். அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறினால் வரிச் சலுகையை விலக்கிக் கொள்வதில் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அப்படியான நடவடிக்கையை நாங்கள் வரவேற்போம்.”

– என்று சுமந்திரன் இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

தமிழருக்கு நீதி வழங்கப்பட வேண்டும், அதிகாரம் முறையான விதத்தில் பகிரப்பட வேண்டும் என்பவை தொடர்பில் இலங்கைக்குக் கடும் அழுத்தம் கொடுக்குமாறு இந்தச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத்தைத் தமிழரசுக் கட்சியினர் வலியுறுத்தினர் என்றும் தெரிகின்றது.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சக்தி கோயிலடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான தர்சன் சத்தியா (வயது 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தப் பெண்ணின் கணவன் வெளிநாட்டில் உள்ளார். மேற்படி பெண்ணும் மகனும் தும்பளையில் வசித்து வந்துள்ளனர்.

கடற்கரையில் சடலம் காணப்படுகின்றது என்று பருத்தித்துறை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

## தேர்தல் கடமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தேர்தல் கடமையில் இருந்தபோது மயக்கம் அடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது மரணமடைந்தார்.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணையை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. சடலம் அவரின் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.



# ஜனாதிபதி – வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் பொதுச் செயலாளருக்கு இடையில் சந்திப்பு

வியட்நாமுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று பிற்பகல் ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தலைமையகத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் டோ லாமை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான 55 ஆண்டு கால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்த சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.





## வாக்குச்சீட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக்களிப்புக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என அறிவித்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, இந்தத் தேர்தலில் வாக்குச் சீட்டில் புள்ளடி மட்டும் இடவேண்டும் என்று வாக்காளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு ஆளடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதி பத்திரம் மற்றும் செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகியவற்றில் ஒன்றை எடுத்து வரவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

வாக்களிப்புக்கான தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, அலுவலக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பம் செய்தமைக்கான பிரதி ஆகியவற்றை எடுத்து வரவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், வாக்குச்சீட்டில் கட்சிகளின் பெயர்களுக்கு எதிரே கட்சிகளின் சின்னங்களும் சுயேச்சைக் குழுக்களின் பெயர்களுக்கு எதிரே சுயேச்சைக் குழுக்களின் சின்னங்களும் இருக்கும். அதற்கு எதிராக வெற்றுக்கட்டம் இருக்கும். அதில் புள்ளடி இட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஒலிப்பதிவில், உரையாற்றியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க, “வாக்குச்சீட்டில் எழுதவோ, சித்திரம் கீறவோ, கிறுக்கவோ, எண்ணங்களை எழுதவோ, பெயர்களை எழுதவோ வேண்டாம். புள்ளடி இடப்படாத எந்தவொரு வாக்குச்சீட்டும் நிராகரிக்கப்படும்.” – என்றார்.



# 10 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் 300 கோடி ரூபா நட்டம்

கடந்த 10 வருடங்களில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் நாட்டிற்கு சுமார் 300 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

தொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானப் பீடத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

2021 முதல் 2022ஆம் ஆண்டு வரை 386 போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக 662,388 வேலை மணித்தியாலங்கள் செலவிடப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

வருடாந்தம் சுமார் 35 வேலை நிறுத்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பேராசிரியர் வசந்த அத்துகோரல மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கடமைகளில் 65,000 பொலிஸார்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக சுமார் 65,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

தேவையேற்படின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரை இணைத்துக்கொள்ள எதிர்பார்ப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பொலிஸாரால் நடமாடும் கண்காணிப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது எவரேனும் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின் அவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைதி காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுமென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுயாதீனம் சாத்தியமா?

நாளை நாடு முழுவதும் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான தேர்தலின் வாக்களிப்பு இடம்பெறுகின்றது. அநேகமாக ஏற்பாடுகள் எல்லாம் முறையாகச் செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட விடயத்தில் தேர்தல் ஆணையம் நீதி நியாயமாகவும், சுயாதீனமாகவும், ஒரு சீர் தன்மையை நிலை நிறுத்தும் விதத்திலும் நடந்து கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு பெருமளவில் இருக்கின்ற பின்புலத்தில், இந்தத் தேர்தல் முன்னெடுக்கப்படுகின்றது. வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட விடயத்தில் - நீதிமன்ற விவகாரங்களை தேர்தல் ஆணையம் கையாளும் விவகாரத்தில் - தங்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக பல தரப்புக்களும் மனம் வெதும்பும் நிலையில், தன்னிச்சையாகவும், சுயாதீனமாகவும் செயற்பட வேண்டிய தேர்தல் ஆணையத்தின் பங்கு பணி குறித்து பல தரப்புகளிலும் குறை கூறப்படுகின்றது. ஆயினும் எல்லா இடங்களிலும் தேர்தலை ஒரே நாளில் எப்படியும் நடத்தி முடித்து விட வேண்டும் என்ற தனது முயற்சியில் தேர்தல் ஆணையம் மும்முரமாக இருப்பது வரவேற்கத்தக்கதே.

“மற்ற நாடுகளில் நடைபெறுவது போல, ஒவ்வொரு உள்ளூராட்சி சபையின் செயற்பாடுகளையும் மேம்படுத்த, தேர்ந்தெடுக்கப்படும் அனைத்து உறுப்பினர்களும் கட்சி சார்புகளைப் பொருள்படுத்தாமல் ஒன்றிணைந்து செயல்பட வேண்டிய நேரம் இது.” - என்று தேர்தல் ஆணையர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்திருக்கின்றார்.

“கோட்பாட்டில், இலங்கையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள், தேசிய அளவில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், சுயாதீனமாகச் செயல்படவும், தங்கள் உள்ளூர் தொகுதிகளுக்கு சேவை செய்யவும் நோக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால் நடைமுறையில், அவை பெரும்பாலும் மத்திய அல்லது மாகாண மட்டத்தில் ஆளும் கட்சியால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செல்வாக்கு செலுத்தப்படுகின்றன” என்று ரத்நாயக்க கூறியிருக்கின்றார்.

இந்தச் சபைகள் அவற்றின் சொந்த வரவு - செலவுத் திட்டங்கள், அதிகாரங்கள் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளைக் கொண்டுள்ளன என்றும், சபை உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்றும் அவர் கூறினார். “அவர்கள் எந்த அரசியல் கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தலாம். அல்லது சுயாதீனமாக இருக்க முடியும். மேலும் அவர்கள் மற்ற நாடுகளில் நடப்பது போல தங்கள் சபைகளுக்குச் சுயாதீனமாக சேவை செய்ய முடியும்” என்றும் ரத்நாயக்க கூறினார்.

உள்ளூராட்சி சபைகள் 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் மற்றும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம், நகர சபைகள் கட்டளைச் சட்டம் மற்றும் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சட்டப்பூர்வ சுதந்திரத்துடன் செயற்படத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆயினும் இதற்கு மாறான கருத்தை - தங்களது தரப்பு அதிகாரத்தை பெறும் சபைகளுக்கு மட்டும் கண்ணை மூடிக்கொண்டு நிதி திட்டங்கள் அனுமதிக்கப்படும் என்ற சாரப்பட - நாட்டின் தலைவர் பிரசாரக் கூட்டங்களில் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டு வந்த பின்புலத்தில், அது குறித்து தேர்தல் ஆணையம் காத்திரமான நடவடிக்கை ஏதும் எடுத்ததாக மக்களுக்குத் தெரியப்படுத்தாத சூழலில், இந்தத் தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.



# பஹல்காம் தீவிரவாத தாக்குதல் எதிரொலி: மோடி - விமானப்படைத் தளபதி சந்திப்பு

இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இந்திய விமானப்படைத் தளபதி ஏர்மார்ஷல் அமர் பிரீத் சிங், பிரதமர் மோடியை அவரது இல்லத்தில் நேற்று சந்தித்தார். முன்னதாக நேற்று முன்தினம் பிரதமர் மோடியை கடற்படையின் தலைமை அட்மிரல் தினேஷ் கே.திரிபாதி சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்பானது பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து, பிரதமர் மோடி தலைமையில், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைகள் தலைமைத் தளபதி அனில் சவுகான் மற்றும் முப்படைத் தளபதிகள், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்துக்கு சில நாள்களுக்கு பின்னர் நடக்கிறது.

முன்னதாக, ஏப்ரல் 22 ஆம் திகதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டத்தைத் தொடர்ந்து, ஏப்ரல் 23 ஆம் திகதி பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழுக் கூட்டம் நடந்தது. அதில், பயங்கரவாதத்துக்கு பதிலடி கொடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்களும், அதற்கு பின்னால் உள்ள சதிகாரர்களும் கடுமையான தண்டனையை எதிர்கொள்வார்கள் என்று அரசு தெரிவித்தது.

தொடர்ந்து, பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் பதிலடிக்கான நேரம், வழிமுறை, இலக்குகளைத் தீர்மானிப்பதற்கான முழு செயல்பாட்டுச் சுதந்திரத்தை அரசு, பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கியது.

பஹல்காம் தாக்குதலுக்கு பின்பு அரசு அனைத்துக்கட்சி கூட்டத்தையும் கூட்டியது. அப்போது பயங்கரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு வழங்குவதாக பல்வேறு கட்சிகளும் உறுதி அளித்தன.

பஹல்காம் தாக்குதலை நடத்தியது பாகிஸ்தான் ஆதரவு பெற்ற லஷ்கர்-இ-தொய்பா என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்த தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் இராணுவத்தின் உளவு அமைப்பு தேவையான உதவிகளை செய்து கொடுத்து இருப்பதும் தேசிய புலனாய்வு அமைப்பு நடத்திய முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தம், அட்டாரி எல்லை சோதனைச் சாவடி மூடல், பாகிஸ்தானியர்களுக்கு விசா இடைநிறுத்தம், வர்த்தகம் நிறுத்தம், இறக்குமதி தடை உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா எடுத்தது நினைவுகூரத்தக்கது.

# இம்ரான் கான், பிலாவல் பூட்டோவின் எக்ஸ் கணக்குகள் இந்தியாவில் முடக்கம்



பாகிஸ்தானின் அரசியல் ஆளுமைகளாக உள்ள அந்நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மற்றும் முன்னாள் அமைச்சர் பிலாவல் பூட்டோவின் எக்ஸ் தள கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன. அரசின் சட்டப்பூர்வ கோரிக்கையை ஏற்று இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர்களது எக்ஸ் தள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பிரபல பாகிஸ்தான் நடிகர்கள் மகிரா கான், ஹனியா ஆமிர், சனம் சயீத், அலி ஜாபர் ஆகியோரின் இன்ஸ்டாகிராம் கணக்குகள் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் ஒருவர் இந்த நடிகர்களின் பக்கங்களை அணுக முயன்றால், மத்திய அரசின் சட்டப்பூர்வ கோரிக்கையை ஏற்று அவரது கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக தகவல் வருகிறது. பாகிஸ்தான் நடிகர்களான பிலால் அப்பாஸ், இக்ரா அஜீஸ், அயேசா கான், இம்ரான் அப்பாஸ், சஜல் அலி ஆகியோரின் இன்ஸ்டாகிராம் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளன. இருப்பினும் விபிஎன் மூலம் இந்தியர்கள் பாகிஸ்தான் நட்சத்திரங்களின் இன்ஸ்டா கணக்கை அணுக முயற்சிப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

ஏற்கெனவே பாகிஸ்தான் நாட்டின் 16 யூடியூப் சனல்களை இந்தியா முடக்கி இருந்தது. இந்தியாவிற்கு எதிராக தவறான தகவல்களை இந்த யூடியூப் சனல்கள் பகிர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதில் பாகிஸ்தான் நாட்டின் ஊடக நிறுவன யூடியூப் சனல்களும் அடங்கும். கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப்பின் யூடியூப் சேனலும் முடக்கப்பட்டது.

தற்போது இந்தியாவில் எக்ஸ் தள கணக்கு முடக்கத்தை எதிர்கொண்டுள்ள பிலாவல் பூட்டோ, சிந்து நதிநீரை இந்தியா நிறுத்தினால் அதில் இந்தியர்களின் ரத்தம் பாயும் என சொல்லி இருந்தார். அவரது இந்த கருத்து சர்ச்சையானது குறிப்பிடத்தக்கது.



# இஸ்ரேல் விமான நிலையத்தை குறிவைத்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல்

இஸ்ரேல் விமான நிலையத்தை குறிவைத்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்டதை இஸ்ரேல் தரப்பும் உறுதி செய்துள்ளது. தாக்குதல் தொடர்பான காட்சிகள் இணையத்தில் பரவி வருகின்றன. இந்தத் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்று உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலின் சர்வதேச விமான நிலையமான பென் குரியன் மீது நடந்த தாக்குதலுக்கு ஏமனில் உள்ள ஹவுதி பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இஸ்ரேல் மீது ஹவுதிக்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் ஹவுதியின் செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரீ, பென் குரியன் விமான நிலையம் இனி விமான போக்குவரத்துக்கு பாதுகாப்பானது இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் காரணமாக மத்திய இஸ்ரேலில் உள்ள விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து சிறிது நேரம் நிறுத்தப்பட்டது. சில விமானங்கள் திருப்பி விடப்பட்டன. விமான நிலையத்தின் அனைத்து வாயில்களும் சிறிது நேரத்துக்கு மூடப்பட்டன.

தாக்குதல் குறித்து இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ் கூறுகையில், யார் எங்களைத் தாக்கியிருந்தாலும், அவர்கள் ஏழு மடங்குக்கு திருப்பித் தாக்கப்படுவார்கள் என்று எச்சரிக்கை விடுத்தார்.

# சிங்கப்பூரில் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி வெற்றி

சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

வாழ்க்கை செலவு மற்றும் நாட்டின் எதிர்காலப் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான பிரச்சினைகள் ஆதிக்கம் செலுத்திய தேர்தலில் சிங்கப்பூரின் ஆளும் மக்கள் செயல் கட்சி அமோக வெற்றி பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு கட்சித் தலைவராகப்பொறுப்பேற்றபின்னர் முதல்தடவையாக பிரதமர் லோரன்ஸ் வோங் தலைமையில் நடைபெற்ற தேர்தலில் பூரின் ஆளும் மக்கள் செயல் கட்சி 65.6 வீத வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்தில் உள்ள 97 ஆசனங்களில் 87 ஆசனங்களை கைப்பற்றி பெரும்பான்மையைப் பெற்றுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியான மத்திய இடது தொழிலாளர் கட்சி 10 ஆசனங்களை மாத்திரமே பெற்றுள்ளது.

பணவீக்கம், சம்பளப் பிரச்சினை மற்றும் வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகள் காணப்பட்டாலும் ஆளும் மக்கள் செயல் கட்சிக்கு சிங்கப்பூர் மக்கள் ஆதரவளித்துள்ளனர்.



# டொனல்ட் ட்ரம்ப்பின் கோரிக்கையை நிராகரித்தார் மெக்ஸிகோ ஜனாதிபதி



அமெரிக்க இராணுவத்தினரை தமது நாட்டிற்குள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என மெக்ஸிகோ ஜனாதிபதி Claudia Sheinbaum தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை தாம் நிராகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் திட்டமிட்ட குற்றங்களை எதிர்த்து போராட எவ்வாறு உதவ முடியுமென ட்ரம்ப் கேட்டுக்கொண்டார் எனவும் அமெரிக்க இராணுவத்தை பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார் என்றும் பரிந்துரையை தாம் நிராகரித்ததாகவும் மெக்ஸிகோ ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

# றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பியின் ஓய்வூதிய விண்ணப்பத்தில் சர்ச்சைகள்



**- ந.லோகதயாளன் -**

யாழ். மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பில் நாடாளுமன்றில் போட்டியிட்டு வெற்றியீட்டிய முன்னாள் அதிபர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்திக்கு தவறான வழியில் – முறையற்ற வழியில் – ஓய்வூதியத்திற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் இப்போது வெளிவந்துள்ளது.


இது இப்போது அவரது நாடாளுமன்றப் பதவிக்கு ஆப்பாகக் கூடிய சாத்தியங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய ஜெ.றஜீவன் அதிபர் சேவை தரம் 11ஐச் சேர்ந்தவர். 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஓர் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபட முடியாது, என்றபோதும் தமது பதவியில் இருந்து விலகித் தேர்தலில் அவர்கள் போட்டியிட முடியும். அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலம் கொண்டவர்கள் வேட்புமனுத் தாக்கலுக்கு குறைந்தது 10 தினங்களிற்கு முன்பு தங்களைப் பணிக்கு நியமித்த நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்து, 7 தினங்களிற்கு முன்னர் ஒப்புதல் பெற்றால், ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்க முடியும் என நிர்வாக நடைமுறையின் –11 (உரோமன் இலக்க) சுற்று நிரூபம் தெரிவிக்கின்றது.

அதாவது, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி போன்ற அதிபர் பதவியில் இருப்பவர்கள் பதவியை விட்டுத் தாமாக விலகி – அதாவது பதவியைத் துறந்து – தேர்தலில் குதிக்கலாம். அல்லது முறையாக – சட்ட, ஒழுங்கு விதிகளில் உள்ளபடி – ஓய்வுக்கு விண்ணப்பித்து, நேர் சீரராக அனுமதி பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிடலாம்.

அந்த இரண்டையும் அவர் செய்தாரா என்பதுதான் இப்பொழுது எழுந்துள்ள பிரச்சினை. அவர் தேர்தலில் இறங்க முன்னர் தாமாகப் பதவியையும் துறக்கவுமில்லை, முறையாக – ஒழுங்கு விதிப்படி



அத்தியாயம் XXXII

1:3 இனிவரும் காலங்களில் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கின்ற மேற்படி 1:1ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்கள் தமது வேட்பாளர்மையை உறுதிப்படுத்துவதற்காகவோ அல்லது அத்தகைய தேர்தலொன்றில் தனக்கு சாதகநிலை காணப்படுகின்றதா இல்லையாவென பரிசீலித்துப் பார்ப்பதற்காகவோ ஆரம்ப அலுவல்களை மேற்கொள்ளக் கருதுவாராயின் அவர் அவ்வலுவல்கள் எவற்றையும் செய்வதற்கு முன்னர் அரச சேவையில் தான் வகிக்கின்ற பதவியிலிருந்து இராஜினாமா செய்தல் வேண்டும். ஆயினும் 10 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அத்தகைய உத்தியோகத்தரொருவர் சனாதிபதி, பாராளுமன்ற, மாகாண சபை அல்லது உள்ளூராட்சி தேர்தலில் வேட்பாளர் ஒருவராகப் போட்டியிடுவதாயின், வேட்புமனு ஒப்படைக்கும் திகதிக்கு குறைந்தபட்சம் 10 நாட்களுக்கு முன்பு நியமன அதிகாரிக்கு அறிவித்து தேர்தலுக்கான வேட்புமனுவைக் கையளிப்பதற்கு 07 நாட்களுக்கு முன்பே தான் வகிக்கும் பதவியிலிருந்து ஓய்வு பெறலாம். அவ்வாறு ஓய்வு பெறுவதாயின் அவர் அரசிற்கு செலுத்த வேண்டியுள்ள சகல கொடுப்பனவுகளையும் தீர்த்து முடிக்க வேண்டியதுடன், கட்டாய ஒப்பந்த சேவைக் காலமாகவிருப்பின் அதற்காக ஒப்பந்தப் பணத்தைச் செலுத்தி ஒப்பந்தத்திலிருந்து விடுபடுதல் வேண்டும். அவ்வாறு ஓய்வுபெறும் ஒருவருக்கு அவரது வயது 55 பூர்த்தியாகும் திகதி முதல் ஓய்வூதியமும் பணிக்கொடையும் உரித்தாகும்.

2. அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவரான உத்தியோகத்தர் ஒருவர் அவற்றை அனுபவித்தல்

2:1 அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடையவரல்லரென 1:1 ஆம் உட்பிரிவின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகுதியினர் தவிர்ந்த வேறோர் உத்தியோகத்தருக்கு, 2:2 ஆம் உட்பிரிவில் எடுத்து விளக்கப்பட்டுள்ளவாறு தன் அரசியல் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க முடியும்.

2:2 அத்தகைய அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு அனுபவிக்க உரித்துள்ள அரசியல் உரிமைகள் வருமாறு

2:2:1 அரசியற் கட்சியொன்றில் உறுப்பினராதலும் அக்கட்சி நடவடிக்கைகளில் பங்குபற்றலும்.

2:2:2 அரசியல் தன்மையதான விடயமொன்றைப் பற்றி அபிப்பிராயம் தெரிவித்தல்:- உ-ம் : அரசியல் விடயங்கள் தொடர்பாக பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுதல் அல்லது அத்தகைய விடயங்கள் ஆராயப்படுகின்ற கூட்டங்களில் உரையாற்றுதல், அத்துடன்

2:2:3 சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மக்கள் தீர்ப்பு, மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் அல்லது உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலொன்றில் போட்டியிடல்.

2:3 இவ்வுரிமைகளை அனுபவித்தல், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்:


2:3:1 அரசியல் கட்சியொன்றின் வேலைகளில் பங்குபற்றல், அரசியல் கூட்டமொன்றில் உரையாற்றல் முதலியவற்றிற்கான உரிமைகள் அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு வழங்கப்படுவது அரசாங்க சேவையில் அவர் ஆற்றுகின்ற வேலைகளுக்கு பங்கம் ஏற்படாத நிலையில் மாத்திரமேயாகும். எல்லா வேளைகளிலும் அரசாங்க சேவை நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுதல் வேண்டும். திணைக்களத் தலைவரினால் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அத்தகைய அரசியல் நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காக விடுமுறை வழங்கப்பட

386

ஓய்வு அனுமதி பெறவுமில்லை என்று இப்போது தெரிய வந்துள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தலின் வேட்பு மனுத் தாக்கல் ஒக்டோபர் 4 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 11 ஆம் திகதி நிறைவடைந்தது. ஜெ.றஜீவன் ஒக்டோபர் 3 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் மூலம் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்துள்ளார் என யாழ்ப்பாணம் வலயக் கல்வித் திணைக்களம் 2025-01-04 ஆம் திகதி அன்று, அதாவது 3 மாதங்களின் பின்னர் மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டுள்ளது.

ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவனின் ஓய்வூதியத்துக்கான பரிந்துரையை வலயக் கல்வி அலுவலகம் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிய



யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

Jaffna Zonal Education Office

021 222 2449

2025.01.04

ஓய்வு பெறல் அனுமதி

திரு ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் (இ.அ.சேவை - 2)

XXXII

9. ஓய்வூதியப் படிவம் -PD 03

தொடர்ச்சி ▼


# றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பியின் ஓய்வூதிய விண்ணப்பத்தில் சர்ச்சைகள்

தொடர்ச்சி▲

தற்கமைய மாகாணக் கல்வித் திணைக்களம் தமது சிபார்சுடன் 2025-01-24 அன்று 20 தினங்களில் மாகாண கல்வி அமைச்சிற்கு அதனை அனுப்பி வைத்துள்ளது. மாகாணக் கல்வித் திணைக்களத் தால் மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பிய கடிதத் தில் 2024-11-14 முதல் ஓய்விற்கு விண்ணப்பித் துள்ளார் என முரணான திகதியிடப்பட்டுள்ளபோதும் 2024-10-03 இல் இருந்து ஓய்வுபெற சிபார்சு செய்யப்படுவதாக மாகாண கல்விப் பணிப்பாளர் மாகாண கல்வி அமைச்சிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண கல்வித் திணைக்களத்தின் சிபார்சிற்கு ஏற்ப 2025-04-04 இல் இரு மாத காலங்களின் பின்னர் மாகாணக் கல்வி அமைச்சானது உதவிச் செயலாளர், அதிபர் கிளை, கல்வி அமைச்சு, இசுறு-பாய, பத்திரமுல்லைக்கு ஓய்வூதியத்திற்கு தமது சிபார்சுடன் சகல ஆவணங்களையும் அனுப்பி வைத்துள்ளது.


வடக்கு மாகாணத்தில் இரு தாதியர்கள் விடுமுறை எடுக்காது தேர்தல் வேட்புமனுவில் ஒப்பமிட்டமைக் காக பணியில் இருந்து இன்றுவரை இடை நிறுத்



03 SEP 2024

04 OCT 2024

Forwarded Please



Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs

Northern Provincial Council

தப்பட்டுள்ளனர். அதற்கு முன்பு இடம்பெற்ற தேர்தல்களில் முறையாக அனுமதி பெறாமல் போட்டியிட்டமைக்காக கலாசார உத்தியோகத்தர் ஒருவர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் உள்பட ஐவர் பணியீல் இருந்து இன்றுவரை இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் இதே கட்சியில் போட்டியிட்ட ஆசிரி யர் வெற்றியீட்டியதன் பெயரில் பணி விலகல் கடிதம் பெறப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியில் யாழ்ப்பாணத்தில் நாடா ளுமன்ற உறுப்பினராகத் தேர்வான ஜெ.றஜீவன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பு மனு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 2024-10-10 அன்று கையளிக்கப்பட்டுள்ளது. சமாதான நீத வான் அந்த வேட்பு மனுவை 2024-10-09 இல் உறுதிப்படுத்தியுள்ளார்.

றஜீவன் அரசியல் உரிமை அற்ற ஓர் அதி காரியான அதிபராகப் பணியாற்றியமையால் குறைந்தது வேட்பு மனுக் கையளிப்பிற்கு 10 தினங்களிற்கு முன்னர் நியமன அதிகாரிக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தேர்தல் சட்டம் மற்றும் சுற்று நிருபங்கள் கூறுகின்றன. அதி பர்களிற்கான நியமன அதிகாரி மத்திய கல்வி அமைச்சின் செயலாளர் என ஒரு தர்க்கமும் முன் வைக்கப்பட்டாலும், அதற்கும் அப்பால் முன்னாள் அதிபரான ஜெ.றஜீவன் நல்லூர் கோட்ட அதிகா ரிக்கு 2024-10-03 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் வழங்கியதன் பெயரில் ஏழு தினங்கள் மட்டுமே



PARLIAMENTARY ELECTION

கால அவகாசம் காணப்படுகின்றது. உரிய பத்துத் தினங்கள் இல்லை.

அத்துடன் ஓய்வுக்கான முறையான அனுமதியை குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்னராவது அவர்

தொடர்ச்சி▼

# றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பியின் ஓய்வூதிய விண்ணப்பத்தில் சர்ச்சைகள்

**தொடர்ச்சி▲**


பெற்றிருக்க வேண்டும். இன்னும் கூட அதற்கான அனுமதி அவருக்குக் கிடைக்கவில்லை.

2024-10-03 ஆம் திகதியிடப்பட்ட ஜெ.ரஜீவ னின் ஓய்வு விண்ணப்பக் கடிதத்திலும் நல்லூர் கோட்டத்தினர் தமது ஆர்வக் கோளாறு காரணமாக - 2024 ஒக்ரோபர் 03 ஆம் திகதி என்பதற்குப் பதிலாக - 2024 செப்ரெம்பர் 03 ஆம் திகதி என்றே, ஒரு மாதத்திற்கு திகதி முத்திரையைப் பொறித்து விட்டமை மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அதிபர் சேவையின் நியமன அதிகாரியான மத்திய கல்வி அமைச்சின் செயலாளரின் முகவரியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்படவில்லை என்ற தர்க்கமும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவை அனைத்திற்கும் அப்பால் யாழ்ப்பாணம் வலயம், வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு என்பன செம்மணி வீதியில் ஒரே வளவிற்குள் உள்ள போதும் இவரது கோவை மத்திய கல்வி அமைச்சிற்கு அனுப்பப்படுவதற்கு 6 மாதங்கள் எடுத்துள்ளமை ஏன் என்ற விடயம் திணைக்களம் சார்பிலும் நியாய மான கேள்வி எழுவதற்கு காரணமாக அமைகின்றது.

தவிரவும், இந்த விடயங்கள் நோண்டப்படுகின்ற போது பாடசாலைக்கு அவர் கடைசியாக பணிக்கு சமுகமளித்த தினம் பரிசீலனைக்கு உள்ளாகும் என்பதும் கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.


PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

NP/20/ET/D/18

2. ஓய்வூதிய விண்ணப்ப படிவம் (FD 03)

ACCOUNTANT

ADMINISTRATIVE OFFICER

# விடுதலை புலிகளிடம் இருந்த நகைகளை முஸ்லிம்களுக்கு அரசு வழங்க வேண்டும்

**(பாறுக் ஷிஹான்)**

விடுதலை புலிகளிடமிருந்த நகைகள் அரசுக்கு கிடைத்துள்ளமை ஜனாதிபதி அநுர குமார அரசுக்கு கிடைத்த வெற்றியாகும் என்பதுடன் இந்த நகைகளில் அதிகமானவை வடக்கு முஸ்லிம்களிடமிருந்து புலிகளால் பறிக்கப்பட்டவை என்பதால் அந்த நகைகளை அரசு முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டும் என அரசை ஸ்ரீலங்கா ஐக்கிய காங்கிரஸ் கோரியுள்ளது.

இது பற்றி உலமா கட்சித்தலைவரும் ஐக்கிய காங்கிரஸ் ஸ்தாபக தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1990 ஆம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்த முஸ்லிம்களை இன ரீதியாக பிரித்து விடுதலைப் புலிகள் அம்மக்களின் அனைத்து சொத்துக்களையும் ஆயுத முனையில் பறிமுதல் செய்து வெளியேற்றியமை யாவரும் அறிந்ததே.



இதன் போது வடமாகாண முஸ்லிம்களின் ஒட்டுமொத்த உடமைகளையும் பறித்து எடுத்து விட்டு, உடுத்திய உடுப்புடன் வெளியேற்றப்பட்ட போது பெண்கள் அணிந்திருந்த தங்க ஆபரணங்களையும் கைகளில் மறைத்து கொண்டு வருவதற்கு இருந்த நகைகளையும் - குறிப்பாக சிறுமிகளின் காதுகளிலும் கழுத்துகளில் இருந்த நகைகளைக் கூட - கழற்றி எடுத்து விட்டே துரத்தினர்.

அதன் பின் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் புலிகள் பதுக்கி வைத்திருந்த பெருந் தொகையான நகைகளை அரச படையினர் கைப்பற்றி அதனை தாம் கொள்ளையடிக்காது அரசாங்கத்திடம் ஒப்படைத்தமை பாராட்டத்தக்க செயலாகும். அந்த நகைகள் நீதிமன்ற உத்தரவில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்து தற்போதைய அரசு பொலிஸாரின் பாதுகாப்பில் பரிசீலனைக்காக கொடுக்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற உத்தரவுடன் அவற்றை இழந்த மக்கள் உரிய ஆதாரங்களை காட்டினால் வழங்கப்படலாம் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது.

என்றாலும் அதிகமான முஸ்லிம்களிடம் எந்த வித ஆதாரமும் இல்லை என்பதுடன் நகைகளைப் பறி கொடுத்த பலர் மரணமடைந்து விட்டனர். இவ்வாறான நிலையில் பெருமளவில் இழந்த முஸ்லிம்களின் நகைகளை அரசு நியாயமான முறையில் ஆய்வு செய்து முஸ்லிம்களுக்குரிய நகைகளை மதிப்பீடு செய்து அவர்களிடம் இதற்கான சத்திய பிரமாண கடிதம் பெறப்பட்டு வழங்க வேண்டும் எனவே ஜனாதிபதியை கேட்டுக்கொள்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சப்ரகமுவ பல்கலைக்கழக றாகிங் சம்பவம் நான்கு மாணவர்கள் நேற்றுக் கைதாகினர்!

சப்ரகமுவ பல்கலைக்கழக றாகிங் சம்பவம் தொடர்பாக 4 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள், மாணவர் ஒருவரின் தற்கொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகளை அடுத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

குற்றப் புலனாய்வுத் துறை நடத்திய விசாரணைகளைத் தொடர்ந்து இந்தக் கைது மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் துன்புறுத்தப்பட்டனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிய மாணவர் துன்புறுத்தல் சம்பவம் தொடர்பாக கடந்த 29 ஆம் திகதி சமனலவேவ காவல் நிலையத்தில் கிடைத்த புகாரைத் தொடர்ந்து, புதிய மாணவர் துன்புறுத்தலுக்கு ஆளான சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்களில் 20 பேரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற பொலிஸ் நிலையம் வெள்ளிக்கிழமை 2 ஆம் திகதி நடவடிக்கை எடுத்தது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களான மாணவர்கள் இன்று திங்கட்கிழமை பலாங்கொடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசேட அதிரடிப் படையினரினால் ஹெரோயினுடன் ஒருவர் கைது!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அட்டப்பளம் பகுதியில் வைத்து ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 07.00 மணியளவில் சாகாமம் விசேட அதிரடிப் படையினர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சாகாமம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபரை சாகாமம் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

நிந்தவூர் 23 ஐச் சேர்ந்த 32 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 160 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது. சந்தேக நபர் சான்றுப் பொருளுடன் சட்டநடவடிக்கைக்காக நிந்தவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மற்றும் சாகாமம் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுமி மீது பாலியல் கொடூரம் பசறையில் வேட்பாளர் கைது

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் பசறைப் பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவரைப் பாலியல் வன்கொடுமை செய்தமைக்காகக் கைது செய்யப்பட்டார்.

34 வயதான சந்தேக நபர் பசறைப் பகுதியைச் சேர்ந்தவர். பசறை பிரதேச சபைக்குப் போட்டியிடுகிறார்.

பதினான்கரை வயதுச் சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.05.2025

## மேஷம்

இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களைக் குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித் தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

## ரிஷபம்

நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியை பேணுங்கள்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை.

## மிதுனம்

இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.

## கடகம்

இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது.

## சிம்மம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.

## கன்னி

இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப் போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.

## துலாம்

உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.

## விருச்சிகம்

இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப்பணிகளைக்கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதற்றப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.05.2025




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதை அடையத் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மையானது.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள்.




நீங்கள் இன்று உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.



# வீடு வீடாக வாக்குக் கேட்கப் போன சமயம் யுவதியை வன்கொடுமை செய்த வேட்பாளர்!

## லக்கல பகுதியில் சனியன்று சம்பவம்

19 வயது யுவதியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் இந்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என லக்கல பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு வீடாகச் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, வீட்டிற்குள் சட்டவிரோதமாக நுழைந்தே அவர் இவ்வாறு வன்புணர்வில் ஈடுபட்டுள்ளார்.

வளர்ந்து வரும் அரசியல் கட்சியொன்றிலிருந்து லக்கல பிரதேச சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் சனிக்கிழமை பிற்பகல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

தேர்தல் பிரச்சாரம் முடிவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு, வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிக்கும் பிரசாரத்தின் போது பாலியல் வன்கொடுமை நடந்ததாக பொலிஸாருக்குக் கிடைத்த புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், 650 சுவரொட்டிகளை வைத்திருந்த இரண்டு உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்கள் பொலிஸ் காவலில் எடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டனர் என லக்கல பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.